**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.133/2022**

2025 –ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 02.09.2025</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தமிழ்செல்வன் (PW– 1) | வயது | : | 63 /2025 |
| த/க பெயர் | : | திரு. தங்கவேல் | தொழில் | : | ஆசிரியர் (ஓய்வு) |
| முகவரி | | கீழ திருப்பாலக்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**இந்நீதிமன்ற IA.No.180/2025 நாள் 13.08.2025 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு 1, 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) 2ம் பிரதிவாதி மலர்விழி 3ம் பிரதிவாதி சிவசுப்ரமணியன் ஆகியோர்களுக்கும் எனக்கும் சுமூக உறவுமுறை என்றால் சரிதான். 2 , 3 பிரதிவாதிகளுக்கு குடும்பத்தில் ஏற்பட்ட ஆவணங்கள் தொடர்பான விபரங்கள் அனைத்தும் தெரியும் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி சிவசுப்ரமணியனுக்கு மன்னார்குடி கணபாடிகள் தெருவில் 3200 சதுரடியில் வீடும், உள்ளிக்கோட்டை கிராமத்தில் புல எண்.241 ல் 1 ஏக்கர் 53 செண்ட்டும், புல எண்.62/1 ல் 9 செண்ட், புல எண்.62/2 ல் 5 செண்ட் , சுந்தரக்கோட்டை கிராமத்தில் 1 ஏக்கர் 67 செண்ட் நிலங்களை பாகம் மூலம் எனது அம்மா உயிருடன் இருக்கும்போது பாகம் மூலம் பிரித்து கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதற்கான எழுத்து மூல ஆவணம் எழுதி கொடுத்தாரா என்றால் பதிவு செய்யப்பட்ட ஆவணம் எழுதி கொடுத்தார். எந்த தேதியில் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை.
2) எனது அம்மா வீரம்மாள் 2004 ல் இறந்துபோனார் என்றால் சரிதான். அவர் இறப்பதற்கு முன் எப்போது பிரித்து கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. எனது அம்மா எனது குடும்ப மற்ற நபர்களுக்கு சொத்துக்களை பிரித்து கொடுத்தாரா என்றால் இல்லை. சிவசுப்ரமணியனுக்கு பிரித்து கொடுத்த சொத்தினை தற்போது அவர் விற்று விட்டாரா என்றால் வீடு மட்டும் உள்ளது, மற்ற சொத்துக்களை விற்பனை செய்து விட்டார்.

3) எனது அம்மா சிவசுப்ரமணியனுக்கு சொத்துக்களை மாற்றி கொடுத்ததும் பட்டாவை அவர் பெயருக்கு மாற்றி கொண்டாரா என்றால் இருக்கலாம். எனது அம்மா சிவசுப்ரமணியனுக்கு சொத்துக்களை எழுதி கொடுத்த விபரங்களை எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். இந்த விபரங்களை வழக்குரையில் சொல்லாமல் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சிவசுப்ரமணியன் தொடர்பான சொத்துக்கள் குறித்து இந்த வழக்கில் நான் எதுவும் சொல்லவில்லை.

4) சிவசுப்ரமணியன் தொடர்பான சொத்துக்கள் குறித்து இந்த வழக்கில் நான் எதுவும் சொல்லாததற்கு காரணம் என்னவென்றால் எனது அம்மாவிடமிருந்து எழுதி வாங்கி கொண்டதால் இந்த வழக்கில் சொல்லவில்லை. சிவசுப்ரமணியனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை தவிர்த்துவிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது பகுதி அளவு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ–5 மற்றும் வா.சா.ஆ–6 ஆவணங்களாக பாகப்பிரிவினை பத்திரங்களில் சிவசுப்ரமணியனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 5 , 6 பிரதிவாதிகள் பெயரில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, எனது அப்பா தங்கவேல் பெயரில் இருந்து வருகிறது. 5 , 6 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ள விபரம் எனக்கு எப்போது தெரிந்தது என்றால் 2022 ல் வில்லங்க சான்றை எடுத்து பார்த்தபோது தெரியவந்தது.

6) ஆலங்கோட்டை முன்னால் ஊராட்சி மன்ற தலைவர் மதிவாணனுக்கும் எனக்கும் சுமுக உறவு இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது நெருங்கிய உறவினர் என்றால் இல்லை. ஆலங்கோட்டை முன்னால் ஊராட்சி மன்ற தலைவர் மதிவாணன் எனது குடும்பத்தில் பாகப்பிரிவினை தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தினாரா என்றால் நடத்தினார். தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டதாக ஆலங்கோட்டை முன்னால் ஊராட்சி மன்ற தலைவர் மதிவாணன் சொல்கிறார் என்றால் சரியல்ல. இது தொடர்பாக 29.08.2022 ல் வெண்ணிலை பாகப்பத்திரம் எழுதப்பட்டு அதில் நானும், கோபாலகிருஷ்ணன், சிவசுப்ரமணியன், வீரம்மாள் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

7) வெண்ணிலை பாகப்பத்திரம் ஏற்பட்ட பின்னர் வா.சா.ஆ–5, 6 ஆவணங்கள் எழுதப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–5, 6 ஆவணங்களின்படி எனக்கு குடும்பத்தில் அதிகப்படியான சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கூடுதலாக சொத்து கேட்பதால் 1ம் பிரதிவாதி கோபாலகிருஷ்ணன் எனக்கு 03.08.2022 ல் கண்டிதம்பேட்டை கிராமத்தில் 76 $_{1/3}$ ல் செண்ட் இடம் எனக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

8) எனக்கு கூடுதலாக பாகம் பெற்ற பின்னரும் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை கூடுதலாக வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித பாகவீதமும், உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் எற்படுத்தப்பட்ட ஆவணங்களா வா.சா.ஆ.7 முதல் 9 வரையிலான செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

**<u>7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) 7 , 8 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 7 , 8 பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர் என்பதால் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.08 17:51:00 +0530

District Munsif
Mannargudi.